முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பேயாழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

20.08.2019, செவ்வாய்க்கிழமை

1. **கனிவேலவன் சக்தியாக வந்த**
   **கருணாமூர்த்தியே அரங்கராசா**
   **துணிவுபட உன் ஞானவழியை**
   **தொடர்ந்து உலகோர் ஏற்றுவர**
2. வருகவே வையகம் மாறுமென
   வாழ்த்தியே நித்ய பிரசன்ன ஆசி
   பெருமைபட **விகாரி யாளி திங்கள்**
   **புகலவே சூலதிகதி குசன் வாரம்**
   **(விகாரி வருடம் ஆவணி மாதம் 3ம் தேதி, 20.08.2019, செவ்வாய்க்கிழமை)**
3. வாரமதில் பேயாழ்வார் யானும்
   வழங்குவேன் உலகோர் நலமுற
   சோரமிலா மனபலம் திடமுள
   சுத்தநெறி ஏற்று வருவதுடன்
4. வருவதுடன் மனத்தூய்மை காண
   வள்ளல் நெறி காட்டும் அரங்கர்
   தருமஞான நூல்களை வாசித்து
   தக்க அன்னதான நெறி வளர
5. வளரவே பரோபகார சிந்தை
   வளர்த்து செயல்பாடு காண
   தளரா மேம்பாடு உருவாகி
   தருமபலத்தால் ஞானிகள் ஆசி கிட்டி
6. கிட்டியே எங்கும் எதிலும்
   குறையிலா மனத்தெளிவு திடம்
   திட்டமுடன் மெய்யறிவு கூடியே
   தேசிகனருளால் உலகமக்கள்
7. மக்களெல்லாம் ஞானயுக வாழ்வுக்கு
   மறுமை வென்று தகுதி பெறுவர்
   தேக்கமிலா அவரவர் வாழ்விலும்
   தேவைகளெல்லாம் பூர்த்திபட வாழ்வர்
8. வாழ்வினில் அரங்கன் காட்டும்
   வளர்ச்சிகளை ஞானவழியை
   ஊழ் வெல்லும்படி பின்பற்றி
   உலகோர் தொடர்ந்து வருக
9. வருக கலி இடர்கள் அகலும்
   வருகவே கலிமாயை விலகி
   மாறுதலும் மனபக்குவமும்
   மரணம் வெல்லும் சக்தியும் கூடும்
10. கூடவே அரங்கமகான் வந்த
    குறிக்கோள் எந்த தடையுமில்லா
    ஈடேறி மக்களிடை பலமாகி
    இனிதே ஞானயுகமாக மலரும்

11. மலரும் வளரும் அற்புதம்பட
மண்ணுலகே நிறைவு காணும்
வளமுறும் சகல வகைதனிலும்
வழங்கிய நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம்**

முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்துதித்திட்ட கருணாமூர்த்தியே ஆறுமுக அரங்கமகா தேசிகனே கடைத்தேற்றவல்ல உமது உண்மை ஞானவழியினை உலக மக்களெல்லாம் நம்பிக்கையோடு துணிவுடன் ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்துவர, இவ்வுலகம் விரைந்து மாற்றம் அடையும் எனக் கூறியே உலக நலம் கருதி விகாரி வருடம் ஆவணி மாதம் 3ம் நாள் 20.08.2019, செவ்வாய்க்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பேயாழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பேயாழ்வார்.

மனோபலத்துடன் திடசிந்தையுடன் குற்றமற்ற தூயநெறியினை ஏற்று கடைப்பிடித்து வருவதுடன் அவரவரும் மனத்தூய்மையை அடைந்திட வள்ளல் பெருமானாரின் ஜீவதயவு நெறியினை ஊட்டும் அரங்கரின் தரும ஞானநூல்களை வாங்கிப் படித்து வருவதுடன் அரங்கர் அந்நூல்களில் கூறியுள்ளபடி நடந்து அன்னதான நெறியில் சென்று அன்னதானங்களை செய்தும், தர்மங்களை செய்தும் அவரவரும் தமது பரோபகார சிந்தையை வளர்த்து செயல்பட வேண்டும். இவ்விதமே மக்கள் செய்து வர, அவர்களுக்கு நல்ல முன்னேற்றங்கள் உருவாகி தருமபலத்தினால் ஞானிகளின் அருளாசிகள் கிடைத்து எங்கும் எதிலும் குறையற்ற மனத்தெளிவும் மனோதிடமும் பெருகி அவர்களுக்கு மெய்யறிவு பெருகி அரங்கமகா தேசிகரின் அருளினால் உலக மக்களெல்லாம் ஞானயுக வாழ்விற்கு பிறவியை வென்று தகுதி பெறுவார்கள்.

அவர்களது வாழ்வினில் தடையேதும் வராது, அவர்களது தேவைகளெல்லாம் விரைந்து பூர்த்தியாகும். அரங்கன் காட்டும் அருள்நெறியினை, ஞானவழியினை பின்பற்றி வர, அவர்கள் மேன்மேலும் வளர்ச்சி அடைவார்கள். அவர்களது ஊழ்வினையை வெல்லும் வல்லமை பெறுவார்கள். அவர்களின் கலியுக மாயை எல்லாம் விலகும். தொடர்ந்து அரங்கனை பின்பற்றி வரவர, கலியுக துன்பம் எல்லாம் விலகிவிடும். அவர்கள் மனமாற்றம் உண்டாகி மாறுதலும் மனப்பக்குவமும் பெற்று மரணத்தை வெல்லும் வகையில் ஆற்றல் பெருகி வாழ்வார்கள்.

உலகோர் ஞானவழி செல்ல செல்ல, இவ்வுலகினில் ஆறுமுக அரங்கமகான் அவதாரம் எடுத்ததின் குறிக்கோள் எந்தவித தடையும் இல்லாமல் நிறைவேறி மக்களிடையே ஒற்றுமை பெருகி சமதர்மமும் சமத்துவமும் பெருகி மக்கள் ஞானம் பெற்று இந்த உலகமே ஞானயுகமாக மாற்றம் அடையும். இந்த உலகம் நன்கு வளர்ச்சி அடையும். இந்த பூமியே தன்னிறைவு அடைந்து நிறைவான உலகமாக மாறிடும், சகலவிதமான வளங்களையும் இவ்வுலகம் பெற்று ஞானயுகமாக ஆகி சிறப்படையும் எனக் கூறுகிறார் மகான் பேயாழ்வார்.

–சுபம்–